அ.வ எண்87/2017 மாரியம்மாள் (வாசா1) தேதி:13.03.2023

7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா தபசில் 1வது சொத்து பூர்வீகசொத்து என்று நாங்கள் கட்சிசெய்வதால் வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் குழந்தைகள் இந்த வழக்கில் அவசியகட்சிகள் என்றும் அவர்களை கட்சிசேர்க்காததால் இந்த வழக்கு பாதிப்பு அடைந்துள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் இருக்கும் இடம் கிராமம் என்றும் எனவே மேற்படி கிராமத்தில் ஊர், நாட்டாமை மற்றும் அதுசார்ந்த அமைப்புகள் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் கதவு எண் கொண்ட எந்த வீட்டையும் தாவாசொத்துக்களாக காட்டப்படவில்லை என்றால் வீடுகள் இடிந்துவிட்டதால் வீடுகள் தாவாசொத்தாக காட்டவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 குருசாமிநாயக்கரின் இறப்புசான்றிதழில் மேற்படி குருசாமி நாயக்கர் கதவு எண்.3/72 வீட்டில் வசித்துவந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கதவு எண்.3/72 வீடு தாவாசொத்தாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 பட்டாவில் அய்யப்பநாயக்கர் மகன் அய்யப்பன் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அப்படி ஒரு நபரே கிடையாது. எனவே வா.சா.ஆ.14 பட்டாவின்படி மேற்படி அய்யப்பநாயக்கர் மகன் அய்யப்பன் இந்த வழக்கிற்கு ஒரு அவசியகட்சி என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 தீர்வைரசீதுகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னிட்ட தீர்வைரசீதுகள் என்றால் சரிதான். வருடம் வருடம் நாங்கள் தீர்வை செலுத்திவருகிறோம். வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15 வரை உள்ள பட்டாக்கள் வழக்கு தாக்கல்செய்வதற்கு 2 வருடங்களுக்கு முன்னர் 2015ம் வருடம் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15 வரை உள்ள பட்டாக்களுக்கு தற்போதைய பட்டா நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 முதல் 15 மற்றும் வா.சா.ஆ.19 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல்செய்வதற்காக தயார்செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. குருசாமிநாயக்கர் பெயரிலோ, அல்லது அவரது வாரீசுகள் பெயரிலோ, தொடர்ச்சியான ஆவணங்களை 2014 முதல் 2015 தவிர வேறுஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்தபோதும் முதல்விசாரணையின்போதும் குருசாமிநாயக்கர்பெயரில் தாவாசொத்துகளுக்கும் தொடர்ச்சியான ஆவணங்கள் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் 1 முதல் 3

பிரதிவாதிகள் தாவாசொத்துக்களை கூட்டுஅனுபவத்தில் இருந்தோம் என்று காண்பிப்பதற்கு ஆவணங்கள் எவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில்சொத்துக்களை நாங்கள் நேரடியாக அனுபவம்செய்யவில்லை என்றால் எல்லோரும்சேர்ந்துதான் அனுபவித்து வருகிறோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறன் என்றும் மேற்படி விவரத்தை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்துக்களில் எந்த வருடம், என்னஎன்ன பயிர்கள் செய்து, எவ்வளவு வருமானம் பெற்று யார்யாருக்கு எவ்வளவு வருமானம் பிரித்துகொடுக்கப்பட்டது என்பதை வழக்கில் நான் தேதிகுறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாசொத்துக்களை கூட்டாக அனுபவிக்க லாயக் இல்லை என்று கூறியுள்ளேன். ஆனால் அதற்கான காரணத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 7ம்பிரதிவாதிதான் தாவாசொத்துக்களில் பிரச்சனைசெய்து வருகிறார் என்று வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 7ம்பிரதிவாதி தாவாசொத்தில் வீடுகட்டி 2 அல்லது 3 வருடங்கள்தான் ஆகிறது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 7ம்பிரதிவாதிக்கு ஆக்கிரமிப்புசெய்ததாக வழக்கறிஞர் அறிவிப்புகொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்தோம். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு நகலை நான் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா 90வயதில் இறக்கும்வரை எனது அக்கா சீனியம்மாள் இறக்கும்வரை தாவாசொத்துக்களில் பாகம் கேட்காததற்கு காரணம் உண்டா என்றால் அப்பா இறந்த பிறகு தான் சொத்தில் பாகம்கேட்க முடியும். எனது தாத்தா பெயரில் உள்ள தாவா 1ம் சொத்துக்களில் எனது அப்பா உயிரோடு இருக்குன்மபோது பாகம்கேட்காததற்கு காரணம் உண்டா என்றால் அப்பா உயிரோடு இருந்ததால் பாகம்கேட்கவில்லை. எனது அப்பா இறந்து 20 வருடங்கள் வரை தாவா 1ம்சொத்தில் எதற்காக பாகம்கேட்கவில்லை என்றால் எனக்கு தாத்தா சொத்து விவரம் தெரியாது. பெரியவர்களை வைத்து நாங்கள் பாகம் எதுவும் கேட்கவில்லை. சர்வே எண்.25/2 சொத்திற்கு வடக்கு பக்கம் ரோட்டைதாண்டி கருத்தபாண்டிதேவர் சொத்து இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி சொத்தை சண்முகையா, முருகலெட்சுமி, அய்யம்மாள், பாலமுரளி ஆகியோர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா 4 முதல் 6 அயிட்டசொத்துக்களுக்கு தெற்குபக்கம் சுப்பையாதேவர் சொத்து உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்களுக்கு தெற்குபக்கம் உள்ள சொத்தை 7ம்பிரதிவாதி கிரையம்

பெற்றுள்ளார் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் வாரீசுகள் விவரத்தை இந்த வழக்கில்சொல்லாத காரணத்தினாலும், அவர்கள்அவசிய கட்சி என்பதாலும், இந்த வழக்கில் தபசில் 1ம் சொத்தைபொறுத்தவரை வாதிகள் பாகப்பிரிவினை பரிகாரம் பெற தகுதியானவர்கள் இல்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா சங்கரப்பநாயக்கர் உடன்பிறந்தவர்கள் யார் என்றால் எனது தாத்தா ஒரே பிள்ளையாகும். தாவாசொத்துக்களுக்கு பயிர்காப்பீடு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரோடு உடன்பிறந்த சகோதரி விவரத்தை இந்த வழக்கில் நான் மறைத்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. தாவா 3ம்தபசில் சொத்துகுறித்து இந்த வழக்கில் எந்தபரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. எல்லாசொத்துக்களுக்கும் பரிகாரம்கோரியுள்ளேன். சங்கரப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்ட எல்லாசொத்துக்களையும் இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. குருசாமிநாயக்கர் அவரது வாழ்நாளில் 1973ம்வருடம் வரதராஜபெருமாளை மேஜராககாண்பித்தும், 2 மற்றும் 4 பிரதிவாதியின் கணவர் ராமசுப்பு என்பவரை மைனராககாண்பித்தும் ஜாயிண்டாகஅனுபவித்து வந்து அழகர்சாமிநாயக்கர் என்பவருக்கு சர்வே எண்.612,613/1, 613/2 மொத்தம் 3ஏக்கர் 83செண்ட் நிலத்தை 1507/1973 பதிவு ஆவணம் மூலம் கிரையம்செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு எனது அப்பா எந்தகிரையமும் கொடுக்கவில்லை. மேற்படி அழகர்சாமிநாயக்கர் என்பவர் ரா.ரெங்கசாமிநாயக்கர் என்பவருக்கும், மேற்படி ரெங்கசாமிநாயக்கர் சுப்பையா மாரியப்பன் என்பவருக்கும், மேற்படி 2 நபர்களும், சேர்ந்து என்.வீ.ஆர் எஸ்டேட் என்பவர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் அனைவரும் இந்த வழக்கிற்கு அவசியகட்சிகள் என்றும் மேற்படி சொத்துக்கள் சங்கரப்பநாயக்கருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதின்அடிப்படையில், மேற்படி சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கார காணத்தினாலும் எனது வழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. 1,2 வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும், 65வயதை கடந்தவர்கள் என்றும் குருசாமிநாயக்கரின் பெண்மக்களான நாங்கள் எல்லோரும் 1989 வருடத்திற்கு முன்னரே திருமணம்செய்துகொடுக்கப்பட்ட நிலையில் எங்களுக்கு தபசில் 1வது அயிட்டசொத்தை பொறுத்தவரையில் எந்தவிதமான பாகபிரிவினைகோர

எந்த உரிமையும் இல்லை என்றால்சரியல்ல. ஏற்கனவே பெண்மக்களாகிய எங்களுக்கு எனது தகப்பனார் திருமணம், மற்றும்சீர் சீராட்டு செய்து திருமணம்செய்து கொடுத்த நிலையில், அதற்காக 1வது அயிட்டசொத்தை பொறுத்து நாங்கள் உரிமையை வாய்மொழியாக விட்டுகொடுத்த சூழ்நிலையில் அதன்பிறகு தாவா1வது அயிட்டசொத்தை எனதுசகோதரர்கள் அவர்களுக்குள் வாய்மொழியாக பாகம்செய்து தாவா 4 முதல் 7அயிட்டசொத்துக்களை ராமசுப்பு என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அவர்அனுபவம்செய்து மேற்படி சொத்துக்களை 7ம்பிரதிவாதிக்கு 2002 வருடவாக்கில் ஒப்பந்தம்எழுதிகொடுத்து கிரையத்தொகைமுழுவதும் பெற்று மேற்படி அயிட்டசொத்துக்களில் 10ஏக்கர் நிலத்தை மேற்படி 7ம்பிரதிவாதியும் அவரது மனைவியும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே தாவா 4 முதல் 7அயிட்சொத்துக்களில் வாதிகளுக்கு எந்தஉரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களில் வாதிகள் எந்தகாலத்திலும் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா 4 முதல் 7அயிட்டசொத்துகளின் பொறுத்தவரை வழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால்சரியல்ல. 4 முதல் 7அயிட்டம்சொத்துகளுக்கான வழக்குமூலமும், நீதிமன்றகட்டணமும் சரியானவை என்றால் சரியல்ல. மேற்படி 7ம்பிரதிவாதி தாவா 4 முதல் 7அயிட்ட சொத்துக்களில் கிரையம் ஒப்பந்த தேதிக்கு பின்னிட்டு எங்களுக்கு தெரிந்து சொத்தை அனுபவம்செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி உண்மையை மறைத்து 7ம்பிரதிவாதியை தொந்தரவு செய்யவேண்டும் என்ற எண்ணத்திலும் 7ம்பிரதிவாதியின்சொத்தை அபகரிக்கும்நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. குருசாமிநாக்கரின் உடன்பிறந்த சகோதரிமற்றும் அவரது குழந்தைகள் தற்போதும் உயிரோடு இருக்கிறார்கள் எனவே அவர்களை கட்சிசேர்க்காததால் தாவா1ம்தபசில் பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி